REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 12உ வியாழன் (24—2—55) ★ ★ வெளியூர்: மாசி 13உ வெள்ளி (25—2—55): [இதழ் 217

கருணையே கருணை!

அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாட்டில், 6 உப்புப் பரிசோதனைச் சாலைகள் ஏற்படுத்தப்படுமென்றும் அவைகளில் இரண்டு, தென்னாட்டில்—கடலூரிலும், நாகர்கோயிலிலும் இருக்குமென்றும், இந்திய மேல்சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில், ஒரு 'மாதிரி' உப்பளமும் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். 'மாதிரி' உப்பளத்திற்கு சமார் ரூ. 2 லட்சம் செலவாகும்; பரிசோதனைச் சாலைக்கு சமார் ரூ. 7,000 செலவாகும்; கட்டிடச் செலவு, வாடகை ஆகியன இதில் அடங்காது.

சென்னை வரவு-செலவு திட்டத்தில் ரூபாய் 4·5 கோடி துண்டு

'தி.மு.கழகம் சின்னஞ்சிறு இயக்கமே'

'இருந்தாலும் யானை போன்ற காங்கிரஸ் அஞ்சுவதேன்'

'கழகத்தின் தட்டிக் கேட்கும் தன்மையே அதற்குக் காரணம்'

தனது வளர்ச்சிக்குக் கழகம் தந்துள்ள விலை பட்டியல்

மேட்டுப்பாளையத்தில் அண்ணா தகவல்

"ஒரு காலத்திலே கூட்டம் நடத்துவதற்கே மகத்தான எதிர்ப்புகளை நாம் சமாளிக்க வேண்டியிருந்ததுண்டு; சமீப காலங்களில்கூட, காங்கிரசார் ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகு, எத்தனையோ இடங்களில் கழகக் கூட்டங்களுக்கு 144 தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதுண்டு; தடைகள் விதிக்கப்பட்ட நேரத்தில் அவைகளை மீறினால், போலீசார் துப்பாக்கிக் குண்டுகளைக் காட்டி, சிறைச்சாலையைக் காட்டி மிரட்டியிருக்கிறார்கள்; நாம் அவைகளை எல்லாம் வெகு பொறுமையுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்."

"கூட்டங்களுக்கு மட்டும்தான் அப்படி என்பதல்ல; கழகத் தோழர்கள் எழுதிய புத்தகங்களுக்குத் தடை; எழுதிய குற்றத்திற்காக சிறைவாசம்; கழகக் கருத்துக்களடங்கிய நாடகங்களுக்குத் தடை; மீறி நடித்தவர்களுக்குத் தடியடி, சிறை வாசம்; கழகப் பத்திரிகைகளுக்கு ஜாமீன்; அதனைப் பறிமுதல் செய்தல்;—இப்படி எத்தனையோ எண்ணற்ற தொல்லைகளை தி. மு. கழகம் அனுபவித்துக்கொண்டிருக்கிறது—வளர்கிறது."

"நாம் அடைந்த இந்தத் தொல்லைகளை எல்லாம், மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, நான் இவற்றைக் குறிப்பிடுவது; காங்கிரஸ், பெரியதொரு செல்வாக்கு மிகுந்த கட்சி; இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பெரியதொரு கட்சி; அவ்வளவு பெரியதொரு கட்சியினர், மிகச் சின்னஞ்சிறு இயக்கமான தி. மு. கழகத்தின் வளர்ச்சிகண்டு கிலி கொள்வானேன? அஞ்சுவானேன்?—என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகவுந்தான் குறிப்பிடுகிறேன்."

"யானையைக் கண்டு பூனை அஞ்சுகிறதென்றால், அதில் பொருளுண்டு; ஆனால், பூனையைக் கண்டு யானை ஏன் அஞ்ச வேண்டும்?"

"தி. மு. கழகம், காங்கிரசைக் கண்டு அஞ்சினால் அர்த்தமுண்டு; காங்கிரஸ் 60 ஆண்டுகளாக இயங்கும் கட்சி; ஆட்சியில் அமர்ந்திருப்பதினால் அதிகாரமும், வலுவும் பெற்றிருக்கும் கட்சி; அனைத்திந்தியாவிலும் உள்ள கட்சி; அப்படி யானை போல் பெரிதான ஒரு கட்சி, பூனைபோல் சிறிதான கட்சியான தி. மு. கழக நடவடிக்கைகளில் குறுக்கிட்டுத் தடுக்க முற்படுவானேன்?"

"யானை வலுவுடையதுதான்; ஆனாலும், அதன் காதில் ஒரு அங்குசத்தை மாட்டி இழுத்தால் நகருகிறது; அதைப்போல, தி.மு.கழகம், காங்கிரஸ் செய்கிற காரியங்களை—அதன் போக்கினைச் சுட்டிக் காட்டி, தட்டிக் கேட்கிறவர்களாய் இருப்பதால்—ஒரு கூர்மையான அங்குசம்போல இருப்பதால்தான், காங்கிரஸ் எங்களைப்பற்றி அசட்டையாயிருக்க முடிவதில்லை."

—என்று, 21—2—55 அன்று, மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசுகையில், வட நாடு தென்னாட்டின் மீது எப்படி எல்லாம் ஆதிக்கம் செலுத்துகிறது, எப்படி அடிமை கொண்டிருக்கிறது என்று புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"நாட்டிலே நடைபெறும் நிகழ்ச்சிகள் குறித்தும், எழும் பிரச்சினைகள் குறித்தும் தி. மு. கழகம் என்ன சொல்கிறது என்று தெரிந்துகொள்ள இன்று மக்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

"ஊரில் உள்ள பெரியவரிடம் போய், 'அரிசி விலை ஏறியிருக்கிறதே, ஏன்? தபால்காரன் இன்று கூட வரமாட்டானா? இந்த மாதத்திலே நெல் விதைப்பது நல்லதா?' என்று கேட்டு, 'அவர் நமது குறைகளுக்குப் பரிகாரம் தர மாட்

(4-ம் பக்கம் பார்க்க)

பூகம்ப எதிரொலி!

குவெட்டாவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சிகளின் விளைவாக, குவெட்டாவை அடுத்துள்ள பிரதேசத்தில் பல கிராமங்கள் மறைந்துவிட்டன; 15,000 பேர் வீடிழந்துவிட்டனர். பலூசிஸ்தானில் பயிர் சாகுபடிக்கு ஊன்றுகோலாக இருந்த பாதாள தண்ணீர்க் கால்வாய்கள் சேதமுற்றுவிட்டன.

எதிர்பாருங்கள்!

தொழிலாளர்களின் ஊதியம், கிராக்கிப்படி, போனஸ் ஆகியவை பற்றி தீர்மானிக்க, ஒரு ஊதியக் குழுவை நியமிக்கும் பிரச்சினை பரிசீலனையிலிருப்பதாக மக்கள் சபையில், தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் அறிவித்துள்ளார்.

வருமானம் ரூ. 45 கோடி; செலவு ரூ. 52 கோடி

இரண்டொன்றில் ஒரு கட்ட விற்பனை வரிக்கு ஏற்பாடு

பல பொருட்களுக்கு விற்பனை வரி விலக்கு

புது வரிகள் இருக்காது

இரண்டொரு தினத்தில் சென்னை அரசாங்கத்தின் 1955—56-ம் ஆண்டு வரவு-செலவு திட்டம் வெளியாக இருக்கிறது. அத்திட்டத்தில் ரூ. 4·5 கோடி துண்டுவிழக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தாண்டு வரவு-செலவு திட்டத்தில் புதிய வரி விதிப்பு எதுவும் இருக்காது என நம்பப்படுகிறது. அதற்கு மாறாக, விற்பனை வரியிலிருந்து சில பொருட்களுக்கு விலக்களிக்கப்படும் என நம்பகமாகத் தெரியவருகிறது.

இரண்டொரு பொருட்களுக்கு, பரீட்சார்த்தமாக ஒரு கட்ட விற்பனை வரி விதிப்பு ஒப்புக்கொள்ளப்பட இருக்கிறது என வர்த்தக சமூகம் நம்பிக்கைகொண்டு இருக்கிறது.

இத்தகவலை, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் சென்னை நிருபர் அப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

இதற்கெனவே கூட்டப்பெற்ற அமைச்சர் குழு சிறப்புக் கூட்டத்தில், இவ்வரவு-செலவு திட்டம் இறுதியாகச் செப்பனிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

எதிர்பார்க்கப்படுகின்ற வருமானம் ரூ 45 கோடி எனவும், முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பிடிக்கும் செலவு உள்ளிட்டு செலவுத் தொகை ரூ 52 கோடி எனவும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

துண்டு விழும் தொகையை, நில அபிவிருத்தி வரி மூலமும், தோட்ட வருமான வரி மூலமும், நிலவரி மிகுவரி மூலமும், ஆடைத் துணிகள் மீது விதிக்கப்பட்டுள்ள அதிகப்படி விற்பனை வரி மூலம் கிடைக்கும் வரித் தொகையைக் கொண்டும் நிரப்பக்கூடும் என சென்னை அரசாங்கம் நம்புகிறதாம்.

விற்பனை வரி இனத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் பரீட்சார்த்த மாற்றங்கள், வரி ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளுக்கு ஒப்ப, குறைந்த பட்சம் செய்யப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது.

மேற்படி ஆய்வுக் குழுவின் முழு சிபாரிசும் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை எனவும், இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் உள்ள குழுவின் சிபாரிசுகள் கிடைத்திருப்பதாகவும், அதைக் கொண்டுதான் விற்பனை வரி இனத்தில் சிறு மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

விவசாயக் கடன் வாய்தா மசோதா சட்டமாக நிறைவேற்றம்

கடன் பிரச்சினைக்கு நிரந்தரப் பரிகாரம் கிடைக்குமா?

சட்ட சபை உறுப்பினர்கள் வேண்டுகோள்

சென்னை பிப். 24—

சென்னை சட்டசபையில், விவசாயக் கடன் வாய்தா மசோதா, பிரிவுவாரியான விவாதங்களுக்குப் பின்னர், நேற்று மாலை சட்டமாக நிறைவேறியது.

கடன் வாய்தா சட்டத்தின் மூலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடன் நான்காண்டு தவணைகளில் திருப்பிக் கொடுக்க இம்மசோதா மூலம் வசதி செய்து தரப்படுகிறது.

1955 பிப்ரவரி மாத இறுதியுடன் கடன் வாய்தா சட்டம் காலாவதியாவதால், **1955** மார்ச் முதல் தேதியிலிருந்து புதிய சட்டம் அமுலாகும் வகையில், இந்தியக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மசோதாவில் 10-பிரிவுகள் உள்ளன; பிரிவுவாரியாகப் பரிசீலனை செய்ய சட்டசபைக்கு 3 மணி நேரம் ஆகியது; சர்க்காரே கொண்டுவந்த பல திருத்தங்கள் உள்பட மொத்தம் 150 திருத்தங்கள் பிரரேபிக்கப்பட்டன.

நான்காண்டு தவணைகளுக்குப் பதில், ஆறாண்டு தவணைகளில் கடனை செலுத்த வேண்டும் என்ற திருத்தம் மட்டும் எதிர்க்கட்சியினரால் வற்புறுத்தப்பட்டு, 44 ஓட்டுகள் சாதகமாகவும், 80 ஓட்டுகள் பாதகமாகவும் பெற்று நிராகரிக்கப்பட்டது.

விலைவாசிகள் குறைந்துவிட்டதாலும், விவசாயிகளிடை குழப்ப நிலைமை நிலவுவதாலும், கடன் தவணைகளை அதிகரித்து, குறைந்த தொகைகளாகக் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் பொதுப்படையாகக் குறிப்பிட்டனர்.

இம்மசோதா, விவசாயிகளுக்கு எவ்வித நன்மையும் செய்யவில்லை என்றும், கடன் கொடுத்தவர்களின் நலனையே பாதுகாப்பதாக உள்ளதென்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

ஓராண்டு விளையாவிட்டால், தவணை கடன் தொகையை அடுத்த ஆண்டில் சேர்த்துக் கட்டுவதற்கு சலுகைகள் தரும் அளவுக்கு சட்டத்தில் இடமிருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் சொன்னார்:—

"விவசாயிகள் மட்டுமின்றி, கடன் கொடுத்தவர்கள் நிலைமையையும் சர்க்கார் கவனிக்க வேண்டியிருக்கிறது; அதனால்தான் ஆறாண்டு தவணைகளாக இல்லாமல் நான்காண்டு தவணைகளாக

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை
சென்னை 24—2—1955 வியாழன்

நேசமணியின் விளக்கம்!

மொழி மாநில அடிப்படையில் சென்னை மாநிலத் தமிழகத்துடன் திரு. தமிழ்ப் பகுதிகளை இணைக்க வேண்டும் என்ற ஒரே ஒரு அடிப்படைக் கொள்கையைக் கொண்டு உருவாகி இயங்கிவருவதுதான் திரு. தமிழ்நாடு காங்கிரஸ். இந்த ஒன்று நீங்கலாக மற்றத் துறைகள் அனைத்திலும், திரு-கொச்சி காங்கிரசிற்கோ அகில இந்திய காங்கிரசிற்கோ, திரு. தமிழ்நாடு காங்கிரஸ் முரண்பட்டு இருப்பதல்ல. அகில இந்திய காங்கிரசிற்கும், திரு. தமிழ்நாடு காங்கிரசிற்கும் உள்ள இவ்வுறவு முறையை, திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது முதற் கடமையாகும்.

திரு. தமிழகம் சென்னை மாநிலத்துடன் இணைவது என்பதை அறவே வெறுப்பது திரு-கொச்சி காங்கிரஸ். இவ்வெறுப்பில் அகில இந்திய காங்கிரசிற்கும் ஒத்த பங்கு உண்டு.

இக்கருத்து வேற்றுமையின் காரணமாகவே, திரு-கொச்சி காங்கிரஸ் மந்திரிசபைக்குக் காட்டிவந்த ஆதரவை திரு. தமிழ்நாடு காங்கிரஸ் மீட்டுக் கொண்டது. அதன் விளைவாகக் காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்ந்து, புதிய தேர்தலும் நடைபெறவேண்டியதாயிற்று. தனது மந்திரி சபையை மீண்டும் ஏற்படுத்த திரு-கொச்சி காங்கிரசிற்கு சக்தி இல்லாமலும் போய்விட்டது.

திரு-தமிழ்நாடு காங்கிரசின் மூலக் கோட்பாட்டை ஏற்க மறுப்பது போன்றே, அதன் தனித் தன்மையை ஏற்றுக் கொள்ளவும் திரு-கொச்சி காங்கிரசிற்கு விருப்பம் கிடையாது. அகில இந்தியக் காங்கிரசின் போக்கும் அதுவேதான். இன்றும் இந்த நிலை நீடித்துத்தான் இருந்து வருகிறது.

திரு-கொச்சி காங்கிரசின் தனித்தன்மையையோ, திரு-தமிழ்நாட்டைப் பிரித்துவிட வேண்டுமென்ற மூலக் கோட்பாட்டையோ அகில இந்தியக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவில்லை; திரு-கொச்சி காங்கிரசும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதற்கான 'பண்டமாற்று பேரம்' ஏதும் திரு-கொச்சி காங்கிரசிற்கும் — திரு-தமிழ்நாடு காங்கிரசிற்கும் இடையில் நடைபெறவில்லை என்று காங்கிரஸ் தலைவர் தேபர் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார். இதில் உள்ள உண்மையை மெய்ப்பிக்கும் வகையில் திரு. தமிழ்நாடு காங்கிரசின் மவுனம் இருந்து வருகிறது.

ஆனல், தங்களுடைய அடிப்படை விருப்பத்தை எப்படியும் பெற்றேயாக வேண்டும் என்ற இலட்சிய நோக்குடையோர், அதற்கான வாய்ப்பு ஏற்படும் பொழுது, விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அல்லது அதற்கான வாக்குறுதியைப் பெற, ஒருக்காலும் தவறமாட்டார்கள்; அப்படி தவறவும் கூடாது. தவறுவது மன்னிக்கக் கூடியதுமாகாது.

அவ்வாறு தவறுவது, வேறு ஒரு ஐயப்பாட்டிற்கு இடமளித்துவிடும். அதாவது, குறிப்பிட்ட கோட்பாடு வெற்றி பெற வேண்டுமென்ற உண்மையான பற்று, அதனை வலியுறுத்துபவர்களுக்குக் கிடையாதோ என ஒவ்வொருவரும் ஐயுறுவதற்கு இடமேற்பட்டுவிடும். அரசியல் பொதுவாழ்வில், இத்தொடர்பற்ற போக்கு மிகமிகச் சாதாரணம். இத்தகு அரசியல் ஒழுக்கக் கேட்டிற்கு அகில இந்திய காங்கிரஸ் ஒரு உற்பத்திப் பண்ணை என்பது உலகறிந்த உண்மை.

திருவாங்கூரிலிருந்து திரு. தமிழ்ப் பகுதிகளைப் பிரித்துவிடுவதற்கான ஒப்புதலை திரு-கொச்சி காங்கிரசிடமிருந்து, அதற்கான அரிய வாய்ப்பு கிடைத்தும், அதைப் பயன்படுத்திக்கொள்ளாமல், திரு. தமிழ்நாடு காங்கிரஸ் திரு-கொச்சி காங்கிரசிற்கு, ஆட்சிப் பொறுப்பில் அமர ஏணியாகப் பயன்பட்டிருக்கிறது. இப்போக்கில் காணப்பெறும் தவறு, திரு. தமிழ்நாடு காங்கிரஸ் மேற்கொண்ட இந்நாள் செயலில் உள்ள குறைபாட்டை மட்டும் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடுவதாக இல்லை. திரு. தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் மேற்கொண்ட செயல்களனைத்தையுமே களங்கப்படுத்துவதாக இருக்கிறது.

திரு-கொச்சி காங்கிரசிற்கும் திரு. தமிழ்நாடு காங்கிரசிற்கும் இன்று ஏற்பட்டுள்ள புதிய உறவு பற்றி தி. த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி விளக்கம் தந்திருக்கிறார். அவ்விளக்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

"முன்னமோர் முறை நாம் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது அனைவரும் அறிந்ததே; அப்பொழுது நமது சட்டசபை உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியில் கூட்டு உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தார்கள்; அன்றைய நிலைமையில் இருந்து இன்றைய சூழ்நிலையில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன."

"மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கான எல்லைக் குழுவின் சிபாரிசுகள் இன்னும் சில மாதங்களில் வெளிவரலாம்; அந்தச் சிபாரிசுகளின் அடிப்படையில் மொழிவாரியாக மாநிலங்கள் அமைய வேண்டுமானல் திரு-கொச்சி சட்டசபையும், சென்னை சட்டசபையும் இந்தச் சிபாரிசை ஆமோதித்து தீர்மானங்கள் நிறைவேற்றியாக வேண்டும்."

"இந்தச் சிபாரிசின் அடிப்படையில் மத்தியப் பார்லிமெண்டில் சட்டம் நிறைவேற்றப்படும். திரு-கொச்சி தமிழ் தாலுகாக்களை பிரிக்கும் சிபாரிசை நிறைவேற்றுவதற்குப் பெரும்பான்மையினரான காங்கிரசின் ஒத்தாசை வேண்டும்."

"இந்த ஒத்தாசை நமக்குக் கிடைப்பதற்கு அனுசரணையாக இருக்க வேண்டுமென்று அகில இந்தியத் தலைவர்களும், சென்னைத் தலைவர்களும் நமக்கு ஆலோசனை கூறியதாலும், பி. எஸ். பி.-யை முறியடிப்பது நமது உடனடி குறிக்கோள் ஆகையாலும், இப்பொழுது நமது உறுப்பினர்கள் 12 பேரும், தேசியக் காங்கிரசின் ஆரம்ப உறுப்பினர்களாக காங்கிரஸ் கட்சியில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இந்த முடிவு தமிழ்நாடு காங்கிரஸ் நிறுவனத்தையோ, அது செயல்படுவதையோ எந்தவிதத்திலும் பாதிக்காது."

'மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கான குழுவின் சிபாரிசுகள் இன்னும் சில மாதங்களில் வெளிவரலாம்' என்ற நேசமணி விளக்கம், மாநில திருத்தக் குழுவின் பெயரையும், பணியையுமே திரித்துக் கூறுவதாக இருக்கிறது.

இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்டுள்ள குழு, மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள குழு அல்ல. மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்கு மொழியை அடிப்படையாகக் கொள்ளக்கூடாது; அது தவறானது என்பதை வலியுறுத்தும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவாகும். இவ்வுண்மையை வலியுறுத்த அக்குழுவுக்குத் தரப்பட்டுள்ள பெயர் ஒன்றே போதிய சாட்சியமாகும்.

'மொழிவழி மாநிலத் திருத்தக் குழு' என, அக்குழுவிற்குப் பெயரிடப்பட்டிருக்கவில்லை. 'மாநிலத் திருத்தக் குழு' என்றுதான் அக்குழுவிற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. உலகறிந்த இவ்வுண்மையை நண்பர் நேசமணி, தனது அரசியல் போக்கிற்குச் சாதகமாகத் திருத்திக்கொள்ள முயற்சிக்கிறார். வெற்றி காண முடியாத வீண் முயற்சி!

திறமையான நிர்வாகம், செல்வ நிலை போன்ற அடிப்படைகளைக் கொண்டுதான் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதை ஆராய வேண்டும் எனக் குழுவிற்கு இந்தியப் பேரரசு திட்டவட்டமாகக் கட்டளை இட்டிருக்கிறது. மேற்கூறிய இரண்டு அடிப்படைகளும் பொருந்தியிருந்து, மொழிவழியும் ஒத்துப்போவதாக இருந்தால் மட்டுமே மொழிவழி கருதப்பட வேண்டுமெனவும் ஏற்கனவே இந்தியப் பேரரசு குழுவிற்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறது. மாநில திருத்தக் குழுவின் பிறப்பும் பணியும் நேசமணி அறியார் என ஒருவரும் கூறத் துணியார். நிற்க,

மொழிவழி மாநில ஏற்பாட்டிற்குச் சாதகமாகவோ பாதகமாகவோ காங்கிரஸ் கட்சியினர் எவ்வகையிலும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ பங்கு கொள்ளக்கூடாது என, அப்பொழுது காங்கிரசின் தலைவராக இருந்த பண்டிதர் ஒன்றுக்குப் பலமுறை உரத்துக் கூறிவந்துள்ளார். காங்கிரஸ் அலுவலகமும், இதை வற்புறுத்தி அடிக்கடி சுற்றறிக்கை அனுப்பிய வண்ணம் இருந்துள்ளது. இதையும் நேசமணி அறியார் எனக் கொள்வதற்கில்லை.

திருத்தக் குழுவின் பிறப்பையும், பணியையும் விளக்கமாகத் தெரிந்திருந்த காரணத்தால் தான், ஆகஸ்டு போராட்டத்தைத் துவக்க வேண்டிய கட்டாயம் நேசமணிக்கு ஏற்பட்டது. பட்டம் தாணுவின் அடக்குமுறை கொடுமைகளுக்கெல்லாம் திரு-தமிழர்கள் பலியாக வேண்டிய ஒரு சூழ்நிலையும் உண்டாயிற்று. இவ்வரலாற்று உண்மையை நேசமணி அறிந்தே இருக்கிறார். அவரைப் போலவே திரு-தமிழர்கள் ஒவ்வொருவரும் தெரிந்தே இருக்கிறார்கள்.

உலகறிந்த இவ்வுண்மையை மறைத்துக் கூற அல்லது திரித்துக்கூற நேசமணி முயலுகிறார். அவ்வருமையான பணிக்கு அதிகமான நெஞ்சுத் துணிவு வேண்டுமென்பதில் ஐயமில்லை.

தாம் கூறுவது போன்றே, மொழிவழியில் மாநிலங்களைத் திருத்தியமைக்கும் வகையில் மாநிலத் திருத்தக் குழுவின் சிபாரிசு இருக்கும் என்பதில் நேசமணிக்கு உறுதியான நம்பிக்கை இருக்குமானல், ஆகஸ்டு நேரடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு திரு — தமிழர்களை நேசமணி ஊக்கினதற்கும், தமிழர்களைதாங்கொணுத்தொல்லைக்குள்ளாக்கியதற்கும், ஐவரை மடியச் செய்ததற்கும், அவர் தக்க சமாதானம் கூறக் கடமைப்பட்டிருக்கிறார். திருத்தக் குழுவின் சிபாரிசு மூலம் சுலபமாக திரு. தமிழ்நாடு பிரிக்கப்பட்டுவிடும் என்பதில் உறுதியான நம்பிக்கை நேசமணிக்கு இருக்கும்பொழுது, தமிழர்களை வீண் தொல்லைக்கு ஆளாக்கவைத்தது நியாயமா என்ற கேள்வி எழுவதற்கும் இடமிருக்கிறது. இக்கேள்விக்கும் அவர் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறார். நிற்க,

தனது நேரடி நடவடிக்கைப் போக்கைத் தவறுடையது என தனக்குத் தானே குற்றஞ் சாட்டிக் கொள்வதாக நேசமணியின் இன்றைய விளக்கம் இருக்கிறது. அவருடைய விளக்க அறிக்கை, அவருடைய இன்றைய நடைமுறையில் இருக்கும் குழப்பத்தைச் சுட்டிக் காட்டுவதுடன், அவருடைய முன்னாள் நடைமுறையைத் தவறுடையது, அவசியமற்றது எனக் கடிந்துகூறி, அவர் புரிந்துள்ள குற்றங்களை, மொழிவழி மாநில அமைப்பின் பெயரால் திரு. தமிழ் மக்களுக்கு இழைத்தக் கேடுகளை, அடுக்கிக் காட்டும் சிறந்ததோர் குற்றப் பத்திரிகையாகவும் அமைந்திருக்கிறது.

திரு-தமிழர்களின் ஆகஸ்டு கிளர்ச்சியின்போது, அன்று ஆட்சிப் பொறுப்பில் இருந்த பட்டம் தாணுவும், இன்று நேசமணி விளக்கமெனக் கூறியுள்ள அதே சமாதானத்தைத் தான் கூறினர். அதை ஒப்ப மறுத்து எதிர்த்துப் போராடக் கிளம்பிய அதே நேசமணிதான், இன்று அதே சமாதானத்தை 'நகலாக' இறக்கி, தனது அரசியல் சூதாட்டத்திற்கேற்ற சமாதானமென திரு-தமிழர்களிடம் வீசி எறிகிறார்.

குழு சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டுமானல் பெரும்பான்மையினரான காங்கிரஸ் கட்சியினரின் ஒப்புதல் வேண்டுமென நேசமணி, புளியிட்டு தனது அரசியல் துப்பைத் துலக்க முயற்சித்திருக்கிறார். அவருடைய இக்கூற்று உண்மையாக இருக்குமானல், வேண்டுமென்றே திரு-தமிழர்களை பலியிடத் துணிந்த பொழுது, இந்தப் பேரறிவு நேசமணிக்கு ஏற்படாமல் போய்விட்டது ஏன் எனக் கேட்கத்தான் திரு-தமிழர்களுக்குத் தோன்றும்.

ம. சோ. கட்சி வளர்ச்சியை ஒடுக்க, திரு-கொச்சி காங்கிரசும், திரு-தமிழ்நாடு காங்கிரசும் கூட்டாகச் சதி செய்து, நேரடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு திரு-தமிழர்களைத் தூண்டியதோ என்று ம. சோ. கட்சியினருக்கு ஐயமேற்படுமானல், அதையும் மெய்யென ஒப்பும் வகையில் திரு-தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களின் இன்றைய நடைமுறையும், அதற்குரிய நேசமணியின் விளக்கமும் அமைந்திருக்கிறது.

பெரும்பான்மையினரான காங்கிரஸ் கட்சியினரின் தயவு இருந்தால்தான் திரு-தமிழர் கோரிக்கை நிறைவேறுவது சாத்தியமாகும் என இப்பொழுது நேசமணி கூறுவது உண்மையா? அல்லது பெரும்பான்மையினரான காங்கிரஸ் கட்சியினரை பகைத்துக் கொண்டால்தான் திரு-தமிழர்கள் கோரிக்கையில் வெற்றி ஏற்படும் என அன்று நேசமணி திரு-தமிழர்களை பலியிட்டது உண்மையா? என்ற ஐயப்பாடுகள் திரு-தமிழர்களுக்கு ஏற்படத்தான் ஏற்படும்.

தங்களில் பெரும்பாலோருக்கும், திரு-தமிழ்நாடு காங்கிரசிற்கும் இடையில் வரவிருக்கும் அரசியல் பிரிவின் முன்னறிவிப்புத்தான், நேசமணியின் விளக்கம் எனத் திரு-தமிழர்கள் தீர்மானித்தால் அதில் வியப்பொன்றும் இல்லை.

சென்னை (சட்ட) மேல் சபையில்...

★

மதுபானம் யாருக்கு?

"மாத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டுதான், மதுபான 'பர்மிட்'டுகள் வழங்கப்படுகின்றன. ரூ. 500-லிருந்து ரூ. 1,000 வரை சம்பளம் பெறுபவர்களுக்கு 1-யூனிட்; ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 2,000 வரை வருமானமுள்ளவர்களுக்கு 2 யூனிட்; ரூ. 2,000-க்கு மேற்பட்டு வருமானமுள்ளவர்களுக்கு 4 யூனிட்" என்று, மந்திரி பரமேஸ்வரன் கூறினர்.

"பிரத்தியேகக் காரணங்களுக்காக, ரூ. 500-க்குக் குறைவாக வருமானமுள்ளவர்களுக்கு 2 யூனிட் வரை கொடுக்கப்படும்; டாக்டர்கள் எவ்வளவு யூனிட் சிபாரிசு செய்தாலும் அளவை நிர்ணயிக்க சர்க்காருக்கு உரிமையுண்டு," என்று அவர் கூறினர்.

"வருமானத்தை அதிகமாகக் கொள்வானேன்? அதிக வருமானமுள்ளவர்களுக்கு அதிகப்படியாக மதுபானம் தேவையா?" என்ற கேள்விக்கு, அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளிக்கையில், "வருமானம் அதிகமுள்ளவர்கள் பணத்தை அதிகமாகச் செலவழிக்க முடியும்; மதுபானத்தினல் உடல் நிலை குன்றினலும், டாக்டருக்குப் பணத்தைத் தந்து, சிகிச்சை பெற்றுக்கொள்ள அவர்களுக்குச் சக்தி உண்டு," என்றார்.

சர்க்கார் அலுவலில் தம்பதிகள் நிலைமை

சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் கணவன் - மனைவியரில், கணவனே, அல்லது மனைவியோ மற்றவர் இருக்கும் இடத்திற்குத் தன்னை மாற்ற வேண்டுமென்று கோரிக்கொண்டால், அவ்வாறு மாற்றம் செய்வதால் பொதுவாக எதுவும் பாதகம் ஏற்படாமலிருந்தாலும், உத்தியோக மாற்றம் அனுமதிக்கப்படக் கூடியதாக இருந்தாலும் அக்கோரிக்கையை நிறைவேற்றலாம் என்று பொதுவாக ஒரு சர்க்கார் உத்தரவு உள்ளதென்றும், ஆனல் அவசரம் ஏற்பட்டால் கணவனே—மனைவியோ மாற்றப்படலாமென்று அவ்வுத்தரவு கூறுகிறதாகவும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை சட்டசபையில்....

★

என்ன நடவடிக்கை?

கடந்த 1950-ம் ஆண்டில், மணிமுத்தாறு திட்டத்திற்குப் பணம் வசூலிப்பதற்காக நெல்லை மாவட்டத்திலுள்ள உடன்குடி, நாசரேத், சாத்தான்குளம் ஆகிய ஊர்களில் சில காட்சிகள் நடத்திய அத்தொகுதியைச் சேர்ந்த முன்னாள் சட்டசபை உறுப்பினர், அது விவரம் பற்றிய கணக்குகளை சர்க்காருக்குக் காட்டினாரா என்றும், பாக்கித் தொகைகளையெல்லாம் வசூலிக்க சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பன போன்ற கேள்விகளை உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அவற்றிற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் மாணிக்கவேலர், 'மணிமுத்தாறு திட்டத்துக்குப் பணம் திரட்ட அந்த உறுப்பினர் சர்க்கார் ஏஜெண்டு அல்ல,' என்று குறிப்பிட்டுவிட்டு, அத்திட்டத்திற்கு வேண்டிய பணத்தைத் தாம் நாடகம் நடத்தி வசூலித்துத் தருவதாகவும், அவ்வசூலுக்குச் சர்க்கார் தமாஷா வரியினின்றும் விலக்களிக்கும்படியும் அவ்வுறுப்பினர் கேட்டுக்கொண்டதாகவும், 'வசூல் பணத்திற்குச் சரியான கணக்குகள் காட்ட வேண்டும்,' என்ற நிபந்தனையுடன் அவரது கோரிக்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டதென்றும், பின்னர் அது பற்றிய கணக்குகள் காட்டப்படாததால் அவ்விதிவிலக்குகள் ரத்து செய்யப்பட்டு, தமாஷா வரியை வசூலிக்குமாறு வர்த்தக இலாகாவிற்கு சர்க்கார் உத்தரவிட்டது என்றும் கூறினார்.

சர்க்கார் பஸ்கள்

சென்னை நகர சர்க்கார் போக்குவரத்து பஸ் சர்வீசில், 1954—55-ம் ஆண்டில் 50 புதிய 'லேலண்ட்' பஸ்கள் வாங்கப்பட்டன என்றும், இவை ஒவ்வொன்றின் விலையும் ரூ. 63,700 என்றும், அவை ஒரு மைல் தூரம் ஓடுவதற்காகும் செலவு ரூ. 1—2—0 என்றும் அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்தார்.

சென்ற ஆண்டு செப்டம்பர் திங்களில் எடுக்கப்பட்ட கணக்கு விவரப்படி, ஒரு பஸ்ஸின் தினசரி வசூல் ரூ. 160—12—0 என்றும், அக்டோபர் திங்களில் அது 174—2—0 ஆக உயர்ந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், 'விஜயா' என்னும் அரை மாடி பஸ்ஸின் விலை ரூ 78,620 என்றும், அது ஒரு மைல் தூரம் ஓட செலவழிக்கப்படும் தொகை ரூ. 1—3—6 என்றும் தெரிவித்தார்.

இது என்ன செலவோ?

வேலூர் தேவஸ்தானத்தின் ஆதரவில் சென்னையில் ஒரு தகவல் நிலையம் திறக்க, தர்மபுரம் மடத்திற்கு சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா டெபுடி—கமிஷனர் அனுமதியளித்துள்ளார் என்றும், அத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 12,229 செலவிடப்பட்டுள்ளதென்றும், அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

அந்த நிலையம் மத சம்பந்தமான அறிவைப் பரப்பி, மனிதருக்கு உபயோகமான (!) சேவைகளைப் புரிந்து வருவதாகவும், அங்கே பணம் வீண்செலவு செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

பெண் தொழிலாளருக்கு நஷ்டஈடு

1943-ல் கோவையில் உள்ள 32 துணி ஆலைகளிலிருந்து விலக்கப்பட்ட பெண் தொழிலாளர்கட்கு நஷ்டஈடு நிர்ணயிக்க, 'தொழில் டிரிபியூனல்' செய்த சிபாரிசுக்கிணங்க கோவையில் லேபர் அதிகாரி ஒருவர் நிர்ணயிக்கப்பட்டார் என்றும், அவரது முடிவுப்படி நஷ்டஈடு தராத ஆலைகளிலிருந்து அவற்றை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

யார் பொறுப்பாளிகள்?

அரிசனங்களுக்காகச் சமுதாய மேடைகள் கட்டும் திட்டம், கடந்த 1954-ம் ஆண்டிலேயே, சர்க்காரிடம் பணமில்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டதென்றும், இந்த மேடைகள் உபயோகப்படுத்தப்படவில்லை என்று கூறப்படும் புகார்களுக்கு அரிசனங்களும் உயர் ஜாதி இந்துக்களுமே பொறுப்பாளிகளாவர் என்றும் அமைச்சர் பரமேசுவரன் கூறினார்.

யாருக்கு பஸ் பர்மிட்?

கடந்த 1953—54ல், சேலம் மாவட்டத்தில் எத்தனை பஸ் 'பெர்மிட்டு'கள் வழங்கப்பட்டன என்றும், ஒரு நபருக்குக் கொடுக்கப்பட்ட அதிகபட்ச பர்மிட்டுகள் எவ்வளவு என்றும் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பரமேஸ்வரன், வழங்கப்பட்ட மொத்த பர்மிட்டுகள் 15 என்றும், ஒரு நபருக்கு அதிக பட்சம் 3 பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

"பர்மிட்டுகள் வழங்கப்பட்டவர்களில் ஒருவர் அமைச்சரொருவரின் உறவினர் என்பதற்காக வழங்கப்பட்டதா?" என்ற கேள்விக்கு அமைச்சர், இதுபோன்ற உள்நோக்கங்கள் கற்பித்துக் கொள்வது நல்லதல்ல என்றும், கடந்த 1949-ம் ஆண்டிலிருந்தே மேற்படி நபருக்கு சட்டப் பிரகாரம் பர்மிட் கிடைத்து வந்துள்ளதென்றும், மாறாக, 'யாருக்கோ, உறவினர்,' என்ற காரணத்தால் அல்ல என்றார்.

"சட்ட சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் உறவினர்களுக்கு பர்மிட் எதுவும் கொடுக்கக்கூடாது என்பதாக எவ்வித சட்டமும் கிடையாது," என்றும் மற்றொரு கேள்விக்குப் பதிலாக அமைச்சர் கூறினார்.

நிரந்தரமாகவே மூடப்பட்டதாம்!

சென்ற ஆண்டில் மலபாரில் 14 தொழிற்சாலைகள் மூடப்பட்டன என்றும், அவற்றுள் ஒன்று தவிர மற்றவையாவும் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

எப்படி கிடைக்கும்?

"சென்ற ஆண்டில் அயல் நாடுகளில் சென்று கல்வி பயிலுவதற்காக இந்திய சர்க்காரால் அளிக்கப்பட்ட 'ஸ்காலர்ஷிப்'புகளில் ஒன்று கூட சென்னை மாநிலத்தவர்களுக்குக் கிடைக்கவில்லை," என்று கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில். அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

தொழிலாளர் தகராறு

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த வெலிங்டனில் உள்ள 'பிருந்தாவன்' கம்பெனி தொழிலாளர் மீதுள்ள தகராறுகள் விஷயம் 'அட்ஜுடிகேஷனு'க்கு விடப்பட்டிருப்பதாக அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

ஏற்றுக்கொள்வதா?

தஞ்சாவூர் தாலுகாவிலுள்ள கடுகாவல் எனும் கிராமத்தைச்சேர்ந்த அரிசனங்களிடமிருந்து, தங்கள் கிராமத்திற்கு ஒரு நடைபாதை போட்டுத் தர வேண்டுமென்று கோரிச் செய்துகொண்ட மனு ஒன்று சர்க்காருக்கு வந்ததாகவும், அம்மனுவில், குறிப்பிட்ட நஞ்சை நிலத்தில் பாதையை அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டிருந்ததென்றும், மேற்படி கோரிக்கை அவசியமற்றது என்று சர்க்காருக்குத் தோன்றியதால் அம்மனு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் பரமேசுவரன் கூறினார்.

அவ்வூருக்கு மற்றொரு புறத்திலுள்ள புஞ்சை நிலம் ஒன்றின் வழியாகப் பாதை அமைத்துத் தர ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், இதற்கென ஒரு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது என்றும், குறிப்பிட்ட ஒரு நிலத்தின் வழியாகத்தான் பாதை அமைக்கப்பட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அவர் கூறினார்.

'தரிசு நிலத்திலிருந்து அரிசனங்கள் ஏன் வெளியேற்றப்பட்டனர்?'

சென்னை சட்ட சபையில் புகார்

தென்னார்க்காடு மாவட்ட கல்பட்டு கிராமத்தில், 50 ஏகர் தரிசு நிலத்தில் சாகுபடி செய்துவந்த அரிசனங்கள் கிராமாதிகாரிகளால் வெளியேற்றப்பட்டது குறித்து, சென்னை சட்ட சபையில் விவாதம் நடைபெற்றது.

இதுபற்றி சர்க்கார் விசாரித்து, தானியத்தை அவர்களிடம் ஒப்படைப்பதுடன், நிலத்தையும் அவர்களுக்கு விநியோகிக்க வேண்டுமென தோழர் மணலி கந்தசாமி கூறினார்.

அரிசனங்களால் சாகுபடி செய்யப்பட்ட நெல்லை அதிகாரிகள் எடுத்துச் சென்றுவிட்டனரென, தோழர் ஏ. கோவிந்தசாமி உள்ளிட்ட பல உறுப்பினர்கள் புகார் கூறினர்,

ரெவின்யூ அமைச்சர் பதிலளிக்கையில், குறிப்பிடப்பட்ட இடத்தை சீக்கிரமே சென்று பார்வையிட்டு, நியாயமானதைச் செய்ய முயலுவதாகவும், அனுமதியில்லாத சாகுபடி பிரச்சினையில் பயிர்களை அறுவடை செய்ய வேண்டுமே தவிர, நாசம் செய்யக்கூடாதென்பதே சர்க்கார் உத்திரவு என்றும் குறிப்பிட்டார்.

'வேலையற்றோர் அனுதாபத் தினம்'

ஆண்டுதோறும் நடைபெறும்

ஆண்டுதோறும் மார்ச்சுத் திங்கள் 3-வது ஞாயிற்றுக் கிழமையை 'வேலையில்லாதோர் அனுதாபத் தின'மாகக் கொண்டாடுவதென்று சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வேலையற்ற இளைஞர்கள் மாநாட்டில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

மற்றொரு தீர்மானத்தின் மூலம், வேலையற்றிருப்போரின் பிரச்சினையை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களது அனுதாபத்தைப் பெறவும், வேலையில்லாதோர் பிரச்சினையை சமாளிக்க ஒரு இலாகா ஏற்படுத்துமாறு இந்திய சர்க்காரை வற்புறுத்தவும் இந்தத் 'தினம்' கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஜப்பானுக்கு இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு

சென்ற ஆண்டில் (1953—54) இந்தியாவிலிருந்து சுமார் 26 கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்றும், அதே நேரத்தில் இந்தியாவுக்கு ஜப்பானிலிருந்து 13 கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் தெரிகிறது.

பாராட்டு விழா

அண்ணாமலை பல்கலைக் கழக வெள்ளி விழாவில் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களுக்குப் பல்கலைக் கழகத்தாரால் 'டாக்டர்' பட்டம் வழங்கியதை யொட்டி, ஓர் பாராட்டு விழா 28—2—55 பிற்பகல் 4-30 மணியளவுக்கு அண்ணாமலை பட்டமளிப்பு விழா மண்டபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றம், தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவற்றின் சார்பில், டாக்டர் ராஜா சர். முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெறும். டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்கு ராஜா சர். அவர்கள் பொன்னாடை போர்த்துவார். விழாவில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்குவர்.

"காச நோய் வளர்ச்சிக்கு — மன நோய்யும் காரணமாகும்"

டாக்டர் பி. சி. ராய் கருத்து

கல்கத்தா, பிப். 20—

"மன வேதனையே காசநோய் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

"போதிய உணவின்மை, அதிகமான உடல் உழைப்பு, மூளைக்கு அதிக வேலை, ஒழுங்கற்ற பழக்கங்கள், உடலின் சக்தியை விழுங்குதல் போன்ற காரணங்களைப் போலவே மன வேதனையும் காச நோய் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகும்."

இவ்வாறு, மேற்கு வங்க காசநோய் கழகத்தின் வெள்ளி விழாவை துவக்கி வைத்துப் பேசுகையில் டாக்டர் ராய் குறிப்பிட்டார்.

"வாழ்க்கைக்கான தேவைகளை அடையும் முயற்சியில் மக்கள் அடையும் மன வேதனையும் காச நோயின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகிறது," என்று அவர் கூறினார்.

"நாட்டிலே காணப்படும் தட்ப வெட்ப நிலை, இந்த நோயின் கொடுமைக்கு 10 சதவிகிதமே காரணமாகும்" என்று அவர் மேலும் எடுத்துக் காட்டினார்.

வெல்லம் விலை வீழ்ச்சி?

வெல்லம் விலை ரூ 10-க்கும் குறைந்துவிட்டால் அப்போது வெல்லத்தை வாங்கி, அதன் விலைவாசி குறைந்துவிடாமல் தடுப்பதற்காக உ. பி. சர்க்கார் 5 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த மாநிலத்திலுள்ள கூட்டுறவு இலாகாவினர், ஏற்கனவே 4 மாவட்டங்களில் வெல்லத்தை வாங்க ஆரம்பித்து விட்டனராம்.

அப்படியானால்......!

பிரிட்டனில் 1931-ம் ஆண்டில், 25 முதல் 34 வயது வரை மணமாகாத பெண்கள் 1000 பேரும், பிரம்மச்சாரிகளாக 960 ஆண்களும் இருந்தனராம்; ஆனால் 1951-ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி, மணமாகாத 1,000 பெண்களுக்கு 1,349 பிரம்மச்சாரி ஆண்கள் உள்ளனராம்.

1938-ல் இருந்த எண்ணிக்கையை விட 1951-ல் 16 முதல் 19 வயதுக்குள் மணம் முடித்துக் கொள்ளும் பெண்கள் 83 சதவிகிதம் அதிகரித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கேட்டீரா, சேதி!

சென்னை, பிப். 17—

சென்னை சர்க்கார் போக்குவரத்திலிருக்கும் மொத்தம் 400 பஸ்களில் சுமார் 80 சதவிகிதம் கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாகவே ஓடியுள்ளனவாம்.

சென்னை நகரிலுள்ள சுமார் 57 பஸ் 'ரூட்'களில், தினமொன்றுக்கு 320 பஸ்கள் வரை ஓடுகின்றன. மீதியிருக்கும் பஸ்கள் ரிப்பேர்களுக்காகவும், பிரேக் சர்டிபிகேட்டுகளுக்காகவும் 'ஒர்க் ஷாப்'பிலேயே நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

இப்போது புதிதாக இறங்கியுள்ள 'லேலண்ட்' பஸ்கள் உலகிலேயே புதிய பிரயாணிகள் பஸ் என்றும், இம்மாதிரி பஸ்கள் விலை ரூ 75,000 ஆகிறதென்றும், என்றாலும் இவை ஒவ்வொன்றும் 20 ஆண்டுகள் வரை உழைக்கும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை நகர சபைக்கு சர்க்கார் மானியம்

கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய, சென்னை நகர சபையினரின் தண்ணீர் விநியோகத் திட்டத்தின் செலவுக்காக சென்னை சர்க்கார் ரூ. 1,65,167 மானியத் தொகை வழங்கியுள்ளது என்று தெரிகிறது.

அன்பளிப்பு

19—2—55 சனி மாலை 5 மணியளவில் தோழர் அ. பழனிச்சாமி அவர்களின் இரண்டாவது குழந்தைக்கு புலியகுளத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் "வீரமணி" என்று பெயர் சூட்டினார். அதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பாக ரூ. 5 அளிக்கப்பட்டது.

• • •

20-2-55 காலை 8 மணியளவில் இராமநாதபுரத்தில், தோழர் பழனிச்சாமி—சுமித்திரை திருமணம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ்வளர்ச்சிக்கு ரூ. 6 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

ஜப்பான் கடலில் கடும் சூறாவளி

1,336 பேர் காணப்படவில்லை

ஜப்பானியக் கடலில் அண்மையில் ஏற்பட்ட கடுமையான சூறாவளியின் காரணமாக மீன் பிடிக்கும் படகுகள் கடலில் மூழ்கி விட்டதாகவும், இதன் விளைவாக 1336 பேர் காணப்படவில்லையென்றும் தெரியவருகிறது. மூழ்கடிக்கப்பட்ட இரு படகுகளிலிருந்த 300 பேர் தப்பிவிட்டனராம்.

வெந்நீர் ஊற்றிலிருந்து மின்சார சக்தி

வெந்நீர் ஊற்றுக்களிலிருந்து மின்சார சக்தியை உற்பத்தி செய்வதற்கென ஒரு கம்பெனியை, பிரிட்டிஷ் அணுசக்தி நிறுவனமும், நியூசிலாந்து சர்க்காரும் நியமித்துள்ளனர். வட நியூசிலாந்தீவிலிருக்கும் வெந்நீர் ஊற்று மாவட்டத்தில் இந்த வகையான மின்சார விசை நிலையம் நிறுவப்படுமாம்.

இந்தியாவிலும் இதுபோன்ற வெந்நீர் ஊற்றுக்கள் உண்டென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. பம்பாய்க்கு அருகில் உள்ள ஒரு இடத்தில், 'சூரிய குண்டம்' என்றழைக்கப்படும் ஒரு வெந்நீர் ஊற்று இன்றும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மத்திய கிழக்கு பாதுகாப்பு

துருக்கி — பாகிஸ்தான் முயற்சி

கராச்சி, பிப். 20—

கூட்டுப் பந்தோபஸ்தில் எட்டு மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ப்பதற்கான திட்டமொன்றை துருக்கி ஜனாதிபதியும், பாகிஸ்தான் பிரதமரும் பூர்த்தி செய்துவிட்டதாக பாக். அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஈரான், சிரியா, லெபனான், ஜோர்தான், யேமன் ஆகிய 5 நாடுகளுடன் புதிய பாதுகாப்பு ஒப்பந்தங்கள் வகுக்கப்படுமாம்.

இராக், சிரியா, லெபனான் ஆகிய 3 நாடுகளுடனும் கூட்டுப் பாதுகாப்புப் பற்றிய பேச்சு வார்த்தைகள் முடியும் தருவாயில் உள்ளனவாம்.

ஜோர்தான், யேமனுடன் நடைபெறும் பேச்சு வார்த்தைகள் பின்னர் பூர்த்தியாகுமென்று சொல்லப்படுகிறது.

இந்தக் கூட்டுப் பந்தோபஸ்தில் எகிப்து—சவூதி அரேபிய நாடுகளையும் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

தி.மு.க. சின்னஞ் சிறு இயக்கமே!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

டாரா?' என்றெண்ணுவதைப் போல், மக்கள், இந்த நாட்டில் எந்தப் பிரச்சினையானாலும், 'நமது கருத்தென்ன?' என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

"மதத்தைப் பற்றி — அவை கற்பித்துள்ள கடவுளர்களைப்பற்றி யானாலுஞ் சரி, ஆச்சாரியார் போய் காமராசர் வந்துள்ளாரே அது பற்றியாயினுஞ் சரி, அவர் கொண்டு வந்துள்ள நாடகத் தடைச் சட்டமானாலுஞ் சரி, நேரு சர்க்காரையும் அவர் தயாரித்துள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியாயினுஞ் சரி—'நாம் என்ன சொல்கிறோம்' என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

"இதற்குக் காரணம் — இப்படி மக்கள் தி. மு. கழகத்தின் கருத்தை அறிந்துகொள்ள ஆவலாயிருப்பதற்குக் காரணம், மற்ற அரசியல் கட்சிகளை விட மக்களுடன் அடிக்கடி—பெரும் அளவில் நாம் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது தான்.

"இந்த நாட்டில், இன்று, 1,200 கிளைக் கழகங்களைக் கொண்டதாயும், இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாயும் தி. மு. கழகம் விளங்குகிறது.

"கழக ஏடுகள், பத்திரிகைகள், நாடகங்கள், சினிமாக்கள், பொதுக் கூட்டங்கள் மூலமாக நாள்தோறும் தி மு. கழகக் கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன.

"கல்லூரிகளிலே, பள்ளிகளிலே கல்வி பயிலும் மாணவர்களிடையேயும் கழகக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

"பல துறைகள் மூலமாயும், கழகம் மக்களைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறது.

"இப்படி, கடந்த 25 ஆண்டு காலமாய் மக்களிடை அவர்களுக்காக, அவர்கள் முன்னேற்றத்திற்காகக் கழகம் பணி புரிந்து வந்திருப்பதின் விளைவாகத்தான், தி. மு. கழகம், இன்று நாட்டவரின் நல்லாதரவுக்குப் பாத்திரமாகியுள்ளது.

"இந்த மக்களின் ஆதரவை இத்தனை பெரும் அளவில் பெறுவதற்காகக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிற கஷ்டநஷ்டங்கள், எத்தனையோ, எத்தனையோ!"

மேலும் அவர், தென்னாட்டு மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற வரிகளில் மிகப் பெரியனவற்றை—கொழுத்தவற்றை—வருமான வரி, தேயிலை, காப்பி வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி போன்றனவற்றை எல்லாம் டெல்லி அரசாங்கம் கொள்ளை கொண்டிருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டினார்.

"இப்படி வரியாக—ஏழை எளியவரிடமிருந்து பெருந்தொகையாக டெல்லிபெறுகிற ரூ. 400 கோடியில் 208 கோடி ரூபாய் இராணுவத்திற்கெனச் செலவிடுகிறார்களே, இது நியாயமா? வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்தபோது 60 கோடி ரூபாய்தானே செலவிட்டான்? அவனையே அக்கிரமக்காரன் என்று கூறிய இவர்கள், 208-கோடி ரூபாய் செலவிடுவது நியாயமா?

"காந்தியார் ஒரு முறை சொன்னார்—'இட்லரே படையெடுத்து வந்தாலும், அவனை ஆத்ம பலத்தால் எதிர்ப்பேனே தவிர, படைகளைக் கொண்டு எதிர்க்க மாட்டேன்,'—என்று! 'அவரது சீடர்கள்' என்று தங்களைக் கூறிக்கொள்ளும் இவர்கள், 208 கோடி ரூபாய் செலவிடுகிறார்களே, இதுதான் அகிம்சை வழியா?"

என்று, தி. மு. கழகம் கேட்கிறது—என்று பொதுச் செயலாளர் கூறியபோது, மக்கள் பெருத்த கையொலி எழுப்பினர்.

"நீலகிரியில் விளைகிற உருளைக் கிழங்கை பக்கத்தில் உள்ள இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதானாலும் டில்லி உத்திரவு கொடுத்தால்தானே முடியும்? இப்படி, எல்லா அதிகாரங்களையும், டில்லியே வைத்துக்கொண்டு, சென்னை அரசாங்கத்தை வெறும் 'ஏஜெண்டு' சர்க்காராக ஆக்கியிருப்பது நியாயமா? தேவைதானா இந்த நிலை?"

என்று தி மு. கழகம் கேட்கிறது—என்று, பொதுச் செயலாளர் கூறியதும், மீண்டும் பேரொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர் மக்கள்.

மேலும் அவர், "இந்த நிலை நீடிப்பதினால்தான் இந்த நாட்டு மக்கள் வாழ்விழந்து தவிக்கிறார்கள்; இலங்கைக்கும், மலேயாவுக்கும் கூலிகளாய் சென்று அவதியுறுகிறார்கள்; இந்த அவல நிலை நீங்க திராவிடம் தனியாவதைத் தவிர வேறு வழியில்லை," என்பதை ஆதாரங்களுடன் குறிப்பிட்டார்.

"திராவிட நாடு வேண்டுமென்று நாம் கேட்டால், பாகிஸ்தான் கேட்டபோது, 'தர முடியாது' என்று சொன்னதைப் போலவே, சொல்கிறார்கள்.

"ஓங்கி அறைந்தவனுக்கு ஒன்னேகால் ரூபாய் தந்துவிட்டு, நயமாகக் கேட்கிறவனுக்கு நாலணா தர முடியாது என்பது, என்ன நியாயமோ? அதைப் போலவே பாகிஸ்தான் தந்தான பிறகு திராவிட நாடு தரமுடியாதென்று கூறும் நிலை, எந்த வகையில் நியாயமாயிருக்க முடியும்?"

பொதுச் செயலாளர் அவர்கள் மேலும் பேசுகையில் கூறினார்:—

"இந்தத் திராவிட நாடு இலட்சியம் வளர்ந்து வருவதைக் கண்டு மக்கள் மனதில் மாற்றம் ஏற்ப...ச் செய்யவேண்டும் என்பதற்காகவே, ஆவடியில் ஒரு மாநாட்டினை காங்கிரஸ்காரர்கள் நடத்தினார்கள்; 'சோஷலிசம் மாதிரி சமூகத்தை அமைப்பது' என்று தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள்.

"முதலாளித்துவத்திற்கும் உலகத்தில் ஒரு இடத்தில் செல்வாக்கிருக்கிறது; சமதர்மத்திற்கும் உலகில் செல்வாக்கிருக்கிறது; ஆணுக்கும்-பெண்ணுக்கும் தனித்தனியே சிறப்பிருக்கிறது; ஆனால் முதலாளித்துவமோ, அல்லது சோஷலிசமோ அல்லாத 'சோஷலிசம் மாதிரி சமூகத்தை' அமைக்கப் போவதாகக் காங்கிரசார் கூறுகிறார்கள்.

"பெண் போல பேசுகிறாள்; பெண் போல நடக்கிறாள்—என்று கூறுவதினாலேயே, ஆணும் பெண்ணுமல்லாத அலி, பெண்ணாக ஆகிவிட முடியாதே! அதுபோல் தானிருக்கிறது காங்கிரசின் தீர்மானம்!

"ஒரு ஊரில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர், 'பிக்-பாக்கெட்' செய்பவர்களிடம் மாதம் இவ்வளவு என்று லஞ்சம் வாங்குபவராயிருந்தால், அந்த ஊரில் களவு நிறைந்திருக்கத்தானே செய்யும்? அதைப்போல, மாநாடு நடத்த, மில் முதலாளிகளிடம் லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொள்கிற காங்கிரஸ் செய்யும் சோஷலிசத் தீர்மானம், ஏழைகளுக்கு எப்படி, முதலாளிகளின் சுரண்டலிலிருந்து பாதுகாப்புத் தரமுடியும்?"

என்று கேட்டுவிட்டு, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தன் பேச்சை முடித்துக் கொண்டார்.

மேட்டுப்பாளையம் மக்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தபடி பொதுச் செயலாளரின் பேருரை, அவர்களுக்கு மிகத் திருப்தியைத் தந்தது. மக்களுக்கு பொதுச் செயலாளர் தந்த கருத்து விளக்கம் எழுச்சியூட்டுவதாயமைந்திருந்தது, குறிப்பிடத் தகுந்ததாயிருந்தது.

★

பெயர் சூட்டல்

மேட்டுப்பாளையத்தில் 21–2–55 அன்று மாலை நடைபெற்ற தி மு கழகக் கூட்டம் முடிவுற்றதும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், தோழர் காளியப்பனின் குழந்தைக்கு, 'பாண்டியன்' என்று பெயர் வைத்தார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக

பாகிஸ்தான். அ. நி. சபை வழக்கில் உத்தரவு

லாகூர், பிப். 22—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது தவறு எனவும், அச்சபையின் தலைவரான அமீசுத்தீன்கான் மீண்டும் அப்பதவியில் இருக்க வேண்டுமென்றும், பாகிஸ்தான் மந்திரி சபையில் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த 5 அமைச்சர்களும் விலக்கப்பட வேண்டும் என்றும் சிந்து உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை மாற்றி, பாகிஸ்தான் பெடரல் கோர்ட் உத்திரவிட்டுள்ளது.

சிந்து உயர்நீதி மன்றம் அளித்த மேற்படி தீர்ப்புகளை அமுல் நடத்துவதை நிறுத்திவைக்க பெடரல் கோர்ட் உத்தரவிட்டிருக்கிறது.

சிந்து நீதிமன்றத்தின் உத்தரவை ஆட்சேபித்து பாக். சர்க்கார் செய்துள்ள அப்பீல் மனுவும் வருகிற மார்ச்சுத் திங்கள் முதல் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனவும் தெரிய வருகிறது.

நான்காவது முயற்சி!

பிரான்சின் பிரதம மந்திரியாக எம். எட்கர் பாரை (ராடிகல் கட்சி) தேசிய அசெம்பிளி தேர்ந்தெடுத்துள்ளது; மெண்டே பிரான்ஸ் மந்திரி சபையின் வீழ்ச்சிக்குப் பிறகு, பிரெஞ்சு நாட்டில் சர்க்கார் அமைக்கும் முயற்சியில், இது நான்காவது கட்டமாகும்; ஓட்டெடுப்பின்போது, எட்கருக்கு ஆதரவாக 369-ஓட்டுகளும், எதிராக 310 ஓட்டுகளும் கிடைத்தனவாம்.

சர்ச்சில் சல்லடம்?

"நீர்வளிக்குண்டு, அணுக்குண்டு பரிசோதனைகளுக்குத் தடை விதிக்க வேண்டுமென்று ஐ. நா சபையில் சமர்ப்பித்துள்ள இந்தியப் பிரரேபணையை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்கவில்லை," என்று காமன்ஸ் சபையில் பிரதமர் சர்ச்சில் அறிவித்துள்ளார்.

விவசாயக்கடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ணயிக்கப்பட்டது;

"கடனை யெல்லாம் ரத்து செய்து விடுவதாக சர்க்கார் கூறவில்லை; ரிசர்வ் பாங்கியின் அறிக்கையை யொட்டி, கிராமாந்திரங்களுக்குக் கடன் வசதி செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமுன் இப்பொழுதுள்ள கடன் முறையை ரத்து செய்துவிட முடியாது: கடன் தொல்லை பற்றி இம்மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் பின்னால் ஒரு முடிவு செய்ய இருக்கின்றன; அதனால்தான் கிராமாந்திரக் கடன் முறையை ஒருதலைப் பட்சமாக செய்ய சர்க்கார் விரும்பவில்லை."

இன்று பகல் 2-30 மணிக்கு, நடைபெறப் போகும் மேல்சபையில் இம்மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

சென்னை (சட்ட) மேல் சபையில்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆனால் இதுபோன்ற உத்தரவுகள் ஸ்தல ஸ்தாபன போர்டுகளில் வேலைபார்ப்பவர்களுக்குக் கிடையாதென்றும் குறிப்பிட்டார்.

கணவனும்-மனைவியும் ஒரேகாரியாலயத்திலேயே வேலைசெய்வதில் எவ்வித தடையும் கிடையாது என்றும், ஆனால் அது அந்தந்த உத்தியோகத்தைப் பொறுத்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

"இயற்கையின் நியதிப்படி, கணவனும் — மனைவியும் ஒன்றாக இருக்கவேண்டியிருக்க சர்க்கார் மட்டும் ஏன் அவர்களைப் பிரித்து வைக்கவேண்டும்?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர், கணவனையும் மனைவியையும் பிரித்துவைத்துவிடவேண்டுமென்று சென்னை சர்க்கார் விரும்பவில்லை என்றும், ஆனால் கணவனும் — மனைவியும் ஒரே இடத்தில்தான் உத்தியோகம் செய்யவேண்டுமென்று ஏதாவது இயற்கை நியதி இருக்கிறதா என்பதுதான் தெரியவில்லை என்றும் பதிலளித்தார்.

டிராம்வே கம்பெனி பற்றி

சென்னை டிராம் கம்பெனியை மூடிவிடும்படி சென்னை உயர்நீதிமன்றம் அனுமதித்திருப்பதற்கு எதிராக சென்னை சர்க்கார் அப்பீல் செய்துள்ளது என்ற தகவலை அமைச்சர் பக்தவத்சலம் வெளியிட்டார். அந்த அப்பீல் பைசல் செய்யப்பட்ட பிறகுதான், சென்னை டிராம் கம்பெனித் தொழிலாளர்களுக்குரிய தொகையை வசூலிப்பதில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று அவர் தெரிவித்தார்.

"தொழிலாளருக்குச் சேர வேண்டியது போக, சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையை வசூலிக்கவும் சர்க்கார் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், அவர், உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு மாற்றப்பட்டாலொழிய இது சாத்தியமில்லையென்றும், சர்க்கார் விஷயத்திலும் இது பொருந்தும் என்றும் கூறினார்.

ஆவடி மாநாடு

"ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு அதிக பஸ்களை விடுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டார்களா?" என்ற கேள்விக்கு அமைச்சர் பரமேஸ்வரன் பதிலளிக்கையில், மக்களோ, அல்லது மாநாட்டு நிர்வாகிகளோ அதிக பஸ்கள் விடுமாறு கோரவில்லையென்றும், தன்னுடைய கடமையை நிறைவேற்றும் வகையில் சர்க்காரே அதிக பஸ்கள் விடுவதற்கு வழிகோலியது என்றும் கூறினார்.

கைவிடப்பட்டதாம்!

மதுவிலக்கு அமுல் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருவதைக் கருதி, மாநில முழுவதிலும் கொண்டுவர யோசிக்கப்பட்ட நீரா திட்டம் கைவிடப்பட்டதாம் மந்திரி பரமேஸ்வரன் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

அனுமதிப்பார்களாம்!

ஆரம்பக் கல்வி பரிசீலனைக்கு சர்க்கார் நிறுவியுள்ள 'குழு' தன்னுடைய சுற்றுப்பயண அலுவலை அநேகமாக வரும் ஏப்ரல் மாதத் துடஸ் முடித்துவிடக் கூடுமென்றும், கூடுமான விரைவில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதாகக் குழு கூறியுள்ளதென்றும், குழுவின் அறிக்கை மீது சட்ட சபை விவாதிப்பது பற்றி கவனிப்பதாகவும் கல்வி மந்திரி கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் கூறினார்.

ஆசிரியர்கள் மீது நடவடிக்கை

ஆதாரப் பயிற்சி திட்டத்திற்கு முன்னர் 1,991 செகண்டரி

கழகக் கூட்டங்கள்

★

கும்மிடிப்பூண்டி
கடை வீதியில்
26—2—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: டி. மாரிமுத்து
பேசுவோர்:
என். வி. நடராசன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஆ. கிருஷ்ணன்
அ. பெ. கணேசன்

★

திருமங்கலம்
பந்தடித் திடலில்
26—2—55 சனி மாலை
பேசுவோர்:
கண்ணதாசன்
மு. அப்துல் ரசாக்

★

திருப்பாலக்குடி
26—2—55 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ப. நாராயணசாமி

அண்ணாமலைப் பல்கலைக்கழக பொதுப் பேரவை

25—2—55 மாலை 4½ மணிக்கு, பட்டமளிப்பு விழா மண்டபத்தில், மேற்படி கழகச் சார்பில், 'கலை கலைக்காக அன்று—கலை வாழ்க்கைக்காகவே' என்ற தீர்மானத்தை முன்மொழிந்து தோழர் க. அறிவழகன் பேசுவார். ஒட்டியும் வெட்டியும் பல தோழர்கள் பேசுவர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

பிப். 25: சிறுவந்தாடு (உயர் நிலைப்பள்ளி) [விழுப்புரம்]
26: சிவகங்கை (கல்லூரி)
27: பொன்னமராவதி (தி.மு.க.பொதுக்கூட்டம்)

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

பிப். 25: ஒட்டன்சத்திரம்
26: கும்மிடிப்பூண்டி
27: காலை—சென்னை (8-வது வட்டம் திருக்குறள் முத்தமிழ்க்கழக சிறப்புக் கூட்டம்)
இரவு — திருப்பத்தூர் (வ. ஆ) நாடகத் தலைமை
28: திருப்பத்தூர்-பொதுக் கூட்டம்

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

பிப். 25: வேலூர் (சேலம்)
26: சென்னை (அரும்பாக்கம்)
27: காலை—சென்னை (தண்டையார்பேட்டை) திருமணம்
28: சத்திரப்பட்டி (ராஜபாளையம்)
மார்ச் 1: இலட்சுமீநாராயணபுரம் (ராஜபாளையம்)

கிரேடு, 10,048 ஹையர் எலிமெண்டரி கிரேடு, 18 லோயர் எலிமெண்டரி கிரேடு ஆகியவைகளின் பயிற்சி ஆசிரியர்கள் உபகாரச் சம்பள நிபந்தனை பிரகாரம் நடக்கவில்லையென்றும், சாத்தியமான இடங்களில், கொடுத்த பணத்தைத் திருப்பித் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதென்றும், கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.